22 SEP 2010

சுருக்கம்

நிலம் – அரசுக்கு சொந்தமான நிலங்களில் மதச்சார்பு வழிபாட்டு அமைப்புகளின் ஆக்கிரமிப்பு – உச்ச நீதிமன்ற வழக்கு (SLP) எண்.8519/2006–ல் வழங்கப்பட்ட இடைக்காலத்தீர்ப்பின் அடிப்படையில் வழிபாட்டு அமைப்புகளால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ள இடத்தை அகற்றுதல் / இடமாற்றம் செய்தல் / வரன்முறை செய்தல் தொடர்பாக விரிவான கொள்கை (Comprehensive Policy) உருவாக்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

வருவாய் [நி.மு.6(2)] துறை

அரசாணை (நிலை) எண்.437 நாள் : 13.09.2010.

படிக்கப்பட்டது :

1. உச்சநீதிமன்ற வழக்கு எண்.8519/2006–ல் வழங்கிய இடைக்கால தீர்ப்புரை நாள் 07.04.2009, 29.09.2009 மற்றும் 16.02.2010.
2. முதன்மைச் செயலாளர் மற்றும் நில நிருவாக ஆணையர் நேர்முக கடித எண்.ட்டி1/25820/2009, நாள் 28.10.2009.
3. அரசு கடித எண்.40025/நி.மு6(2)/2008–5, நாள் 04.01.2010.
4. முதன்மைச் செயலாளர் மற்றும் நில நிருவாக ஆணையர், ட்டி1/சிறப்பு–2/25820/2009, நாள் 10.03.2010.

--------

ஆணை:–

அரசுக்குச் சொந்தமான பொது இடங்களில் மதச்சார்பு வழிபாட்டு அமைப்புகளின் ஆக்கிரமிப்புகளை அகற்றுவது தொடர்பான வழக்கில் குஜராத் உயர்நீதிமன்றம் வழங்கிய ஒரு தீர்ப்புரையில், பொது இடங்களில் ஆக்கிரமித்து கட்டப்பட்டுள்ள மதம் சார்ந்த ஆக்கிரமிப்புகளை எவ்வித பாரபட்சமுமின்றி உடனடியாக அகற்ற வேண்டும் என்றும், இவ்வாறு அகற்றப்பட்டது தொடர்பான அறிக்கை ஒன்றை நீதிமன்றத்துக்கு தாக்கல் செய்யுமாறும் குஜராத் உயர்நீதிமன்றம், குஜராத் மாநில அரசுக்கு உத்தரவிட்டது. இத்தீர்ப்பு அமல்படுத்தப்படும்போது உணர்ச்சி பூர்வமான மதப்பிரச்சனைகள் குஜராத் மாநிலத்திற்கு வெளியிலும் பரவ காரணமாகிவிடும் எனக்கருதி மத்திய அரசு, குஜராத் உயர்நீதிமன்றம் 2.5.2006 அன்று வழங்கிய மேற்கண்ட தீர்ப்புக்கு எதிராக, உச்ச நீதிமன்றத்தில் சிறப்பு அனுமதி வழக்கு (எண்.8519/2006) ஒன்றை தாக்கல் செய்தது. இவ்வழக்கில் உச்ச நீதிமன்றம் 4.5.2006–ம் நாளன்று அளித்த உத்தரவில் குஜராத் உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புக்கு இடைக்கால தடை விதித்தபோதிலும், பின்னர் 7.4.2009 அன்று வழங்கிய தீர்ப்புரையில் அனைத்து மாநில மற்றும் யூனியன் பிரதேசங்களையும் இவ்வழக்கில் வாதிகளாக சேர்ந்து கொள்ளுமாறு உத்தரவிட்டது.

2. மேலும், உச்ச நீதிமன்றம் தனது ஆணையில், அரசுக்கு சொந்தமான பொது இடங்கள், பொதுப்பாதைகள் மற்றும் பூங்காக்கள் போன்ற இடங்களில் மதம் சார்ந்த

த.பி.பா.

கோவில், தேவாலயம், மசூதி, குருத்வாரா போன்றவற்றின் பெயரால் அனுமதியற்ற கட்டிடங்கள் செயல்படவோ அல்லது புதிய கட்டிடங்கள் கட்டவோ, இதுமுதற்கொண்டு அனுமதிக்க கூடாது என்றும், மதம் சார்ந்த ஆக்கிரமிப்புகளை அகற்றுதல் / இடம் மாற்றம் செய்தல் / வரன்முறை செய்தல் தொடர்பான விரிவான கொள்கை (Comprehensive Policy) ஒன்றை உருவாக்கி, அக்கொள்கைக்கு செயல்வடிவம் கொடுத்து முடிக்கும் காலத்தையும் குறிப்பிடவேண்டுமென்றும் தீர்ப்பளித்தது.

3. உச்ச நீதிமன்றத்தின் மேற்படி ஆணைக்கிணங்க,

i) பொதுமக்கள் பொது இடங்களை தாராளமாக பயன்படுத்திக் கொள்ளவும்,
ii) பொதுநலன் காக்கவும்,
iii) சட்டம் ஒழுங்கு பராமரிக்கப்படவும்,
iv) பொது இடங்களை தேவைக்கேற்ப பொது பயன்பாட்டிற்கு பயன்படுத்தவும் ஏதுவாக

அரசுக்குச் சொந்தமான பொது இடங்கள், பாதைகள், பூங்காக்கள் போன்றவற்றை ஆக்கிரமித்து கட்டப்பட்டுள்ள கோவில் / தேவாலயம் / மசூதி / குருத்வாரா போன்றவற்றை அகற்றுதல் / இடமாற்றம் செய்தல் / வரன்முறை செய்தல் ஆகியவற்றை ஈடேற்றும் நோக்கங்களை உள்ளடக்கிய வரைவு கொள்கை அரசால் உருவாக்கப்பட்டு இதன் நகல் ஒன்று இவ்வாணையுடன் இணைக்கப்பட்டுள்ளது.

4. அரசுக்குச் சொந்தமான பொது இடங்களில் மதச்சார்பு வழிபாட்டு அமைப்புகளால் ஆக்கிரமித்து கட்டப்பட்டுள்ள கோவில், தேவாலயம், மசூதி, குருத்துவாரா போன்றவற்றை அகற்றுதல் / இடமாற்றம் செய்தல் / வரன்முறை செய்ய நடவடிக்கை எடுக்கும்போது, ஏற்கனவே அரசால் வெளியிட்டுள்ள ஆணைகள் / அறிவுரைகள் / வழிகாட்டு நெறிமுறைகளுடன் தற்போது வெளியிடப்படும் கொள்கை விளக்கத்தில் கூறப்பட்டுள்ள வழிமுறைகளை, முதன்மைச் செயலாளர் மற்றும் நில நிருவாக ஆணையர், அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட அனைத்து துறை அலுவலர்கள் அனைவரும் தவறாது கடைப்பிடிக்குமாறு அரசு ஆணையிடுகிறது.

5. அரசின் இக்கொள்கைத் திட்டத்தினை, சம்பந்தப்பட்ட அனைத்து கீழ்நிலை அலுவலர்களுக்கும் அனுப்பி, தவறாது கடைபிடிக்க தக்க அறிவுரைகள் வழங்குமாறு அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள், சம்பந்தப்பட்ட துறைச் செயலாளர்கள் / துறைத் தலைவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

(ஆளுநரின் ஆணைப்படி)

கி. தனவேல்,
அரசுச் செயலாளர்.

பெறுநர்:—
1. முதன்மைச் செயலாளர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர்,
எழிலகம், சேப்பாக்கம், சென்னை—5. (இ)
2. முதன்மைச் செயலாளர் மற்றும் நில நிருவாக ஆணையர்,
எழிலகம், சேப்பாக்கம், சென்னை—5.

த.பி.பா.

3. அரசு முதன்மை செயலாளர்கள் / அரசுச் செயலாளர்கள்,
   உள்துறை / பொதுத்துறை / நிதித்துறை / பொதுப்பணித்துறை / நெடுஞ்சாலைத் துறை / ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறை / நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை / வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை / தமிழ் வளர்ச்சி, அறநிலையம் மற்றும் செய்தித்துறை,
   தலைமைச் செயலகம், சென்னை—9.
4. அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
5. இயக்குநர், நகராட்சி நிருவாக ஆணையரகம், எழிலகம், சேப்பாக்கம், சென்னை—5.
6. முதன்மை தலைமைப் பொறியாளர், பொதுப்பணித்துறை, சேப்பாக்கம், சென்னை—5.
7. காவல்துறை தலைமை இயக்குநர், சென்னை—4.
8. தலைவர், தமிழ்நாடு மின்வாரியம், சென்னை—2.
9. தலைமைப் பொறியாளர், நெடுஞ்சாலைத்துறை, சென்னை—5.
10. ஆணையர், ஊரகவளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறை, சென்னை—15.
11. தலைவர், சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் அகற்று வாரியம், சென்னை—2.
12. தலைவர், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், சென்னை—35.

நகல்:—

மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், தலைமைச் செயலகம்,
சென்னை—9.

மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டுவசதி துறை அமைச்சர்
அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை—9.

அரசு செயலாளர், வருவாய்த் துறை, அவர்களின் நேர்முக உதவியாளர்,
சென்னை —9.

இ.கோ/உதிரி நகல்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

14/9/10

பிரிவு அலுவலர்.

13/09/10

வருவாய்த்துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை 600 009.

# அரசுக்கு சொந்தமான இடங்களில் ஆக்கிரமித்து கட்டப்பட்டுள்ள கோவில் / தேவாலயம் / மசூதி / குருத்துவாரா போன்றவற்றை அகற்றுதல்/ இடமாற்றம் செய்தல்/ வரன் முறை செய்தல் தொடர்பான கொள்கை.

வருவாய்த்துறை

அரசுக்கு சொந்தமான நிலங்களில் மதச்சார்பு வழிபாட்டு அமைப்புகளின் ஆக்கிரமிப்பு – உச்ச நீதிமன்ற வழக்கு (SLP) எண்.8519/2006 – இடைக்காலத் தீர்ப்பு வழங்கப்பட்டது – அரசுக்கு சொந்தமான இடங்களில் ஆக்கிரமித்து கட்டப்பட்டுள்ள கோவில் / தேவாலயம் / மசூதி / குருத்துவாரா போன்றவற்றை அகற்றுதல் / இடமாற்றம் செய்தல் / வரன் முறை செய்தல் – தொடர்பான கொள்கை.

-------

முன்னுரை

அரசுக்குச் சொந்தமான பொது இடங்களில் மதச்சார்பு வழிபாட்டு அமைப்புகளின் ஆக்கிரமிப்புகளை அகற்றுவது தொடர்பான வழக்கில் குஜராத் உயர்நீதிமன்றம் வழங்கிய ஒரு தீர்ப்புரையில், பொது இடங்களில் ஆக்கிரமித்து கட்டப்பட்டுள்ள மதம் சார்ந்த ஆக்கிரமிப்புகளை எவ்வித பாரபட்சமுமின்றி உடனடியாக அகற்ற வேண்டும் என்றும், இவ்வாறு அகற்றப்பட்டது தொடர்பான அறிக்கை ஒன்றை நீதிமன்றத்துக்கு தாக்கல் செய்யுமாறும் குஜராத் உயர்நீதிமன்றம் குஜராத் மாநில அரசுக்கு உத்தரவிட்டது. இத்தீர்ப்பு அமல்படுத்தப்படும்போது உணர்ச்சி பூர்வமான மதப்பிரச்சனைகள் குஜராத் மாநிலத்திற்கு வெளியிலும் பரவ காரணமாகிவிடும் எனக்கருதி மத்திய அரசு, குஜராத் உயர்நீதிமன்றம் 2.5.2006 அன்று வழங்கிய மேற்கண்ட தீர்ப்புக்கு எதிராக, உச்ச நீதிமன்றத்தில் சிறப்பு அனுமதி வழக்கு (எண்.8519/2006) ஒன்றை தாக்கல் செய்தது. இவ்வழக்கில் உச்ச நீதிமன்றம் 4.5.2006–ம் நாளன்று அளித்த

உத்தரவில் குஜராத் உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புக்கு இடைக்கால தடை விதித்தபோதிலும், பின்னர் 7.4.2009 அன்று வழங்கிய தீர்ப்புரையில் அனைத்து மாநில மற்றும் யூனியன் பிரதேசங்களையும் இவ்வழக்கில் வாதிகளாக சேர்ந்து கொள்ளுமாறு உத்தரவிட்டது.

2. மேலும், உச்ச நீதிமன்றம் தனது ஆணையில், அரசுக்கு சொந்தமான பொது இடங்கள், பொதுப்பாதைகள் மற்றும் பூங்காக்கள் போன்ற இடங்களில் மதம் சார்ந்த கோவில், தேவாலயம், மசூதி, குருத்வாரா போன்றவற்றின் பெயரால் அனுமதியற்ற கட்டிடங்கள் செயல்படவோ அல்லது புதிய கட்டிடங்கள் கட்டவோ, இதுமுதற்கொண்டு அனுமதிக்க கூடாது என்றும், மதம் சார்ந்த ஆக்கிரமிப்புகளை அகற்றுதல் / இடம் மாற்றம் செய்தல் / வரன்முறை செய்தல் தொடர்பான விரிவான கொள்கை (Comprehensive Policy) ஒன்றை உருவாக்கி, அக்கொள்கைக்கு செயல்வடிவம் கொடுத்து முடிக்கும் காலத்தையும் குறிப்பிடவேண்டுமென்றும் தீர்ப்பளித்தது.

3. உச்ச நீதிமன்றத்தின் மேற்படி ஆணைக்கிணங்க,

i) பொதுமக்கள் பொது இடங்களை தாராளமாக பயன்படுத்திக் கொள்ளவும்,

ii) பொதுநலன் காக்கவும்,

iii) சட்டம் ஒழுங்கு பராமரிக்கப்படவும்,

iv) பொது இடங்களை தேவைக்கேற்ப பொது பயன்பாட்டிற்கு பயன்படுத்தவும் ஏதுவாக

அரசுக்குச் சொந்தமான பொது இடங்கள், பாதைகள், பூங்காக்கள் போன்றவற்றை ஆக்கிரமித்து கட்டப்பட்டுள்ள கோவில் / தேவாலயம் / மசூதி / குருத்வாரா போன்றவற்றை அகற்றுதல் / இடமாற்றம் செய்தல் / வரன்முறை செய்தல் ஆகியவற்றை ஈடேற்றும் நோக்கங்களை உள்ளடக்கிய வரைவு கொள்கையினை, எதிர் உறுதி ஆவணமாக அரசு சார்பில் உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது.

உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட உறுதி ஆவண வடிவிலான கொள்கை கீழ்க்காணும் பிரிவுகளைக் கொண்டதாகும்.

a) அரசுக்குச் சொந்தமான பொது இடங்கள், நடைபாதைகள், பூங்காக்கள் போன்றவற்றை ஆக்கிரமித்து கட்டப்பட்டுள்ள மதம் சார்ந்த கட்டிடங்களை குறிப்பிட்ட கால வரையறைக்குள் கணக்கெடுத்து ஆய்வு செய்தல்.

b) அரசுக்குச் சொந்தமான பொது இடங்களில் மதம் தொடர்பான புதிய கட்டிடங்களை கட்டுவதை முழுமையாக தடைசெய்தல் / கட்டுப்படுத்துதல்.

c) பொது இடங்கள், பொது பாதைகள், பூங்காக்கள் மற்றும் தடை செய்யப்பட்டுள்ள அரசு நீர்நிலை / நீர் ஆதார புறம்போக்கு ஆகியவற்றில் ஆக்கிரமித்துக் கட்டப்பட்டுள்ள கட்டிடங்களை குறிப்பிட்ட கால வரையறைக்குள் அகற்றுதல்.

மேற்கூறப்பட்ட கொள்கையினை முழுமையாக செயல்படுத்த மாவட்ட நிர்வாகத்திற்கு பின்வரும் பொறுப்புகளையும், கடமைகளையும் அளிக்கலாம்:—

I. ஆக்கிரமிப்புகளை கண்டறிதல் மற்றும் கணக்கெடுத்தல்

ஒவ்வொரு மாவட்டத்திலும் பின்வரும் குறிக்கோள்களை நிறைவேற்ற மாவட்ட ஆட்சித்தலைவர்களை அதிகாரம் பெற்ற (Desiginated Authority) அலுவலர்களாக நியமனம் செய்தல்:—

i) பொது இடங்களில் கிராமம், குறுவட்டம், வட்டம், கோட்டம், மற்றும் மாவட்ட அளவில் மேற்கொள்ளப்பட்டுள்ள ஆக்கிரமணங்களை கண்டறிய தேவையான அலுவலர்களை மாவட்ட ஆட்சியரே நியமனம் செய்துகொள்ளலாம். இவ்வாறான அலுவலர்கள் அவரவர்களுடைய ஆளுகைக்குட்பட்ட பகுதிகளுக்கு வருவாய்த்துறை, பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைத்துறை, மற்றும் ஊரக வளர்ச்சித்துறைகளிலிருந்து தேர்வு செய்யப்பட்டு மாவட்ட ஆட்சியரின் உத்தரவின் மூலம் நியமனம் செய்யப்படுவார்கள்.

ii) இவ்வாறு ஆக்ரமணங்களை கணக்கெடுக்க நியமனம் செய்யப்படும் அலுவலர்கள் அனைவரும் மாவட்ட ஆட்சியரின் ஒட்டுமொத்த கட்டுப்பாட்டின் கீழ் செயல்படுவர். இவ்வாறான ஆக்ரமணங்களை கணக்கிடும் பணிகளில் ஏற்படும் தவறுதல்கள், விடுபாடுகள் மற்றும் முரண்பாடுகளுக்குக் காரணமான அலுவலர்களைக் கண்டறிந்து அவர்கள் எந்த துறையை சார்ந்திருப்பினும் அவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுப்பது

தொடர்பாக மாவட்ட ஆட்சியரே நில நிருவாக ஆணையருக்கு பரிந்துரை செய்ய வேண்டும்.

iii) ஆக்ரமணங்களைக் கண்டறிந்து கணக்கிடும் பணிகளில் ஈடுபடும் அலுவலர்கள் அரசுக்குச் சொந்தமான பொது இடங்களில் ஆக்கிரமித்துக்கட்டப்பட்டுள்ள கோவில், தேவாலயம், மசூதி, குருத்வாரா போன்றவைகளை கண்டறிந்து, விடுதல்களோ அல்லது தவறுகளோ இன்றி முறையாக கண்டறிந்து கணக்கீடு செய்யவேண்டும்.

iv) இப்பணிகள் தொடர்பான விரிவான வழிகாட்டுதல்கள் / செயல்முறை அறிவுரைகள் அவ்வப்போது அரசால் வெளியிடப்படும்.

**II.** <u>மதம் சார்ந்த புதிய ஆக்கிரமிப்புகளை தடை செய்தல் / கட்டுப்படுத்துதல் / குறைத்தல்</u>

i) அரசு நிலங்கள் / அரசு சொத்துக்களில் மதம் சார்ந்த புதிய ஆக்கிரமிப்புகள் ஏதும் எற்படாத வண்ணம் மாவட்ட ஆட்சியர் உறுதி செய்ய வேண்டும். மேலும், இவ்வாறான ஆக்கிரமிப்புகள் ஏற்படாத வண்ணம் கண்காணிக்கும் கடமைகளையும் பொறுப்புகளையும் மாவட்ட ஆட்சியர், சம்பந்தப்பட்ட வருவாய்த்துறை, நெடுஞ்சாலைத்துறை, பொதுப்பணித்துறை, ஊரக வளர்ச்சித்துறை அலுவலர்களுக்கு ஒதுக்கீடு செய்யவேண்டும். இப்பணிகளில் விதிமீறல்கள் ஏதுமிருப்பின் சம்பந்தப்பட்டவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

ii) மாநில அளவிலும், மாவட்டம், கோட்டம், மற்றும் வட்ட அளவிலும் மாதத்திற்கு ஒருமுறை பணிகளை மேற்பார்வையிடுவது / ஆய்வு செய்வது தொடர்பாக மாதாந்திர ஆய்வுக் கூட்டம் கூட்டப்படவேண்டும்.

iii) பொதுமக்களின் சேவைத்துறைகளான தமிழ்நாடு மின்சார வாரியம், மாநகரக் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியம், தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியம் ஆகியவை அரசுக்குச் சொந்தமான நிலங்களில் ஆக்கிரமித்துக் கட்டப்பட்டுள்ள மதம் சார்ந்த கட்டிடங்களுக்கு மின்சாரம், குடிநீர் மற்றும் கழிவுநீர் இணைப்புகளை வழங்கக்கூடாது. இதுபோன்ற புதிய இணைப்புகள் ஏதும் வழங்கப்பட்டது கண்டறியப்பட்டால் அவ்வப்பகுதிகளில் பொறுப்பிலுள்ள சம்பந்தப்பட்ட அரசு அல்லது சார்பு நிறுவனங்களைச் சார்ந்த அலுவலர்களே அதற்கு பொறுப்பாக நேரிடுவதுடன் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும். மாநகராட்சி, நகராட்சி, மற்றும் ஊராட்சிகள் அரசு நிலங்களில் ஆக்கிரமித்துக் கட்டப்பட்டுள்ள மதம் சார்ந்த கட்டிடங்களுக்கு கட்டிட ஒப்புதலோ வரைபட ஒப்புதலோ வழங்கக்கூடாது.

iv) நகர மற்றும் ஊரமைப்பு திட்ட இயக்குநரகம், சென்னை பெருநகர வளர்ச்சிக்குழுமம் மற்றும் நகராட்சி, ஊராட்சி அமைப்புகள் தங்கள் பொறுப்பிலுள்ள மனைப்பிரிவுகளுக்கு ஒப்புதல் அளிக்கும் போது பொதுப்பயன்பாட்டிற்காக ஒதுக்கப்பட்டு, அவ்வுள்ளாட்சி அமைப்புகளின் கட்டுப்பாட்டில் உள்ள பொதுப்பாதைகள், பூங்காக்கள், தெருக்கள், போன்றவற்றில் மதம் சார்ந்த ஆக்கிரமணங்களோ அல்லது அதிகாரப் பூர்வமற்ற கட்டிடங்களோ

கட்ட அனுமதி வழங்கப்பட மாட்டாது என்று வரைபட ஒப்புதலில் நிபந்தனையாக சேர்க்க வேண்டும். இது தீவிரமாக அமல்படுத்தப்படவேண்டும். மனைப்பிரிவு ஒப்புதல் வேண்டி விண்ணப்பிக்கும் போதே அம்மனைப்பிரிவில் பொது காரியங்களுக்காக ஒதுக்கப்பட்ட இடங்களில் மதம் சார்ந்த கட்டிடங்கள் கட்டப்படமாட்டாது என்ற உறுதி மொழியினை விண்ணப்பதாரர்கள் அளிக்கவேண்டும். இவ்வுறுதிமொழி மீறப்படும் நேர்வுகளில் சம்மந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளே மேற்படி மதம் சார்ந்த கட்டிடங்களை உடனடியாக அப்புறப்படுத்தவேண்டும்.

## III. மதம் சார்ந்த ஆக்கிரமிப்புகளை அகற்றுதல் / இடமாற்றுதல் / வரன்முறை செய்தல்

அரசாணை(நிலை)எண்.105, வருவாய்த்துறை, நாள் 7.3.2001–ல் ஆக்கிரமிப்புகள் அகற்றுதல் தொடர்பாக ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட அளவிலான வழிகாட்டும் குழு (District Steering Committee) அமைத்து ஆணையிடப்பட்டுள்ளது. ஆக்கிரமணங்கள் அகற்றுதலின் முன்னேற்றம் குறித்து மாதாந்திர ஆய்வுக் கூட்டங்கள் மாவட்ட ஆட்சியர்களால் நடத்தப்பட்டு வருகிறது.

மேலும் அரசு புறம்போக்கு நிலங்களில் ஏற்படும் ஆக்ரமணங்களை ஆய்வு செய்து அவற்றை அகற்றுவதற்கான வழிமுறைகளை கண்டறிந்து அறிவுரை வழங்கவும் அரசாணை (நிலை) எண்.771, வருவாய்த்துறை, நாள் 27.11.2006–ல் மாண்புமிகு அமைச்சர் (வருவாய் மற்றும் வீட்டுவசதித்துறை)

அவர்கள் தலைமையில் மாநில அளவிலான உயர்மட்டக்குழு ஒன்றை அமைத்து அரசு ஆணையிட்டுள்ளது. இக்குழுவின் கூட்டம் 23.2.2010 அன்று நடத்தப்பட்டு, கூட்ட நடவடிக்கை குறிப்பு அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் தக்க நடவடிக்கைக்காக அனுப்பப்பட்டுள்ளது.

இக்குழு பின்வரும் அதிகாரங்களைக் கொண்டுள்ளது:–

அ) அரசு நீர்நிலை புறம்போக்குப் பகுதிகளில் செய்யப்பட்டுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுவது தொடர்பான பணிகளை மேற்பார்வையிடுதல்;

ஆ) மாவட்ட அளவிலான வழிகாட்டும் குழுக்கள் அனுப்பிவைக்கும் மாதாந்திர ஆய்வறிக்கைகளின் மீது நில நிருவாக ஆணையரால் தொகுக்கப்பட்டு அனுப்பப்படும் அறிக்கைகளை காலாண்டிற்கொரு முறை ஆய்வு செய்தல்;

இ) அரசு புறம்போக்கில் 10 ஆண்டுகளுக்கும் மேலாக ஆக்கிரமித்து கட்டப்பட்டுள்ள மதம் சார்ந்த நிலையான கட்டிடங்களை அகற்றுவது தொடர்பான திட்டத்தை உருவாக்குதல்;

ஈ) மாவட்ட வழிகாட்டும் குழுக்களினால் ஒருமித்த கருத்தினை எட்ட முடியாத இனங்களில் தக்க முடிவெடுத்தல்.

மாவட்ட மற்றும் மாநில அளவிலான குழுக்கள் ஆக்கிரமிப்புகள் அகற்றுதல் தொடர்பாக பின்வரும் வழிமுறைகளை கடைப்பிடிக்க வேண்டும்

இணங்கச் செய்தல் / ஊக்குவித்தல் / பொதுமக்களை ஈடுபடச் செய்தல்.

## நிலை 1

i) அரசுக்குச் சொந்தமான பொது இடங்களில் செய்யப்பட்டுள்ள மதம் சார்ந்த ஆக்கிரமிப்புகளை அகற்றுதல் / இடமாற்றம் செய்தல் / வரன்முறை செய்வதற்கு, முதலில் ஆக்கிரமிப்பாளர்களை இணங்கச் செய்வதின் வாயிலாகவும், பின்னர் அவர்களுக்கு விளங்கவைப்பதன் வாயிலாகவும், ஒருமித்த கருத்தினை எட்டுவதற்கு முயற்சிக்கவேண்டும்.

ii) தேவையான இடங்களில் பொதுமக்களின் ஒத்துழைப்பையும் பெற்று மாவட்ட நிருவாகம் இணக்கமான சூழ்நிலையை எட்டலாம்.

iii) ஆக்கிரமிப்பு அகற்றும் பணியில் ஈடுபட்டுள்ள அலுவலர்கள் காவல்துறையின் ஒத்துழைப்பை நாடுவது தொடர்பாக மாவட்ட ஆட்சியர் அல்லது மாவட்ட வருவாய் அலுவலரின் அறிவுரைகள் / வழிகாட்டுதலைப் பெற்று ஆக்கிரமிப்புகளை அகற்றலாம்.

## நிலை – 2

மேற்சொல்லப்பட்ட முதல்நிலை முயற்சிகள் வெற்றி பெறாத இனங்களில் மட்டும் ஆக்கிரமணங்களை அகற்றும் அலுவலர்கள் சட்டப்பூர்வமான நடவடிக்கைகள் மேற்கொண்டு, காவல் துறையின் ஒத்துழைப்போடு ஆக்கிரமணங்களை அகற்றலாம்.

மாவட்ட அளவிலான குழுக்களின் பணிகள்

1. மாவட்ட அளவில் சம்பந்தப்பட்ட அலுவலர்களிடமிருந்து ஆக்ரமணங்கள் குறித்த ஒருங்கிணைந்த அறிக்கைகளை பெறுதல்.

2. இவ்வாறு பெறப்பட்ட அறிக்கையினை இனவாரியாக தனித்தனியே ஆய்வு செய்து ஆக்கிரமணங்கள் அகற்றுதல் தொடர்பான செயல் திட்டத்தினை உருவாக்குதல்.

3. ஆக்கிரமிப்புகள் அகற்றுதல் தொடர்பாக உருவாக்கப்பட்ட செயல்திட்டத்தின்படி நடைமுறையில் உள்ள அந்தந்த சட்டங்களின்படியும், அதன் விதிப்பிரிவுகளின்படியும் அதிகாரம்பெற்ற அலுவலர்கள் ஆக்கிரமணங்களை அகற்ற வேண்டும். அகற்றப்பட்ட ஆக்கிரமிப்புகள் தொடர்பான முன்னேற்ற அறிக்கையினை நில நிருவாக ஆணையர் வழியாக மாநில உயர்மட்டக்குழுவிற்கு அனுப்பவேண்டும். ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்ட இடங்களில் மீண்டும் ஆக்கிரமிப்புகள் ஏற்படாமலும், அகற்றப்பட்ட ஆக்கிரமிப்புகள் பிறிதொரு இடத்தில் உருவாகாமலும் தடுக்க தேவையான நடவடிக்கைகளை சம்மந்தப்பட்ட அலுவலர்கள் எடுக்கவேண்டும். இதனை மாவட்ட ஆட்சியர்கள் கண்காணித்து உறுதிசெய்யவேண்டும்.

4. நில நிருவாக ஆணையர் வழியாக மாநில உயர்மட்டக்குழுவால் வழங்கப்படும் அறிவுரைகள் / வழிகாட்டு நெறிமுறைகளை மாவட்டக்குழுக்கள் தவறாது செயல்படுத்த வேண்டும்.

5. தமிழ்நாடு மின்சார வாரியம், மாநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியம், தமிழ்நாடு குடிநீர் வழங்கல் வாரியம் போன்ற சேவைத்துறைகளைச் சார்ந்த பணியாளர்கள் பொது இடங்களில் உள்ள மதம் சார்ந்த ஆக்கிரமிப்புகளை அகற்றும் போது ஆக்கிரமிப்புகள் மீண்டும் ஏற்படாதவாறு மின் இணைப்புகள், குடிநீர் இணைப்புகள், கழிவுநீர் இணைப்புகள் ஆகியவற்றை துண்டிக்க வேண்டும்.

மேற்பார்வையிடுதல் மற்றும் அறிக்கை அளித்தல்

1. ஆக்ரமணங்களை அகற்றுவதற்கான அதிகாரம் பெற்றுள்ள கோட்ட ஆட்சியர் மற்றும் இதர அலுவலர்களால் ஆக்கிரமணங்கள் அகற்றியது தொடர்பாக அனுப்பப்படும் அறிக்கைகளை மாவட்டக்குழு ஒவ்வொரு இனமாக ஆய்வு செய்து தகுதியின் அடிப்படையில் அவற்றை இடமாற்றவோ / வரன்முறை செய்யவோ முடிவெடுத்து உரிய பரிந்துரைகளுடன் மாநிலக்குழுவின் முடிவிற்கு அனுப்பவேண்டும்.

2. அகற்றப்பட்ட மதம் சார்ந்த ஆக்கிரமிப்புகள் தொடர்பாக மாவட்ட ஆட்சியர் மாவட்டக்குழு உறுப்பினர்களுடன் கலந்தாய்வு செய்து அவற்றை வேறு இடத்திற்கோ அல்லது சம்பந்தப்பட்டவர்கள் ஒப்புக்கொண்ட இடத்திற்கோ மாற்றம் செய்ய முடிவெடுக்கலாம்.

இதர நடவடிக்கைகள்

1. ஒவ்வொரு வருவாய்த்தீர்வாயத்தின் (Jamabandhi) போதும் சம்மந்தப்பட்ட கிராம நிர்வாக அலுவலர்களிடமிருந்தும் தமது கிராம எல்லைக்குள் நடப்பு பசலி ஆண்டில் மதம் சார்ந்த புதிய ஆக்கிரமணம் ஏதும் இல்லை என்ற சான்றிதழைப் பெறவேண்டும்.
2. போக்குவரத்திற்கு இடைஞ்சலாக பொது இடங்களில் உள்ள ஆக்கிரமணங்கள் முன்னுரிமை அடிப்படையில் அகற்றப்பட வேண்டும்.
3. ஆக்கிரமிப்பு அகற்றுவதற்கு எதிர்ப்புகளோ / நீதி மன்ற தடைகளோ ஏற்படக்கூடும் என எதிர்பார்க்கப்படும் இனங்களில், அவற்றிற்கு எதிராக அப்பகுதியின் அதிகார எல்லைக்குட்பட்ட உரிய நீதிமன்றங்களில் முன்னெச்சரிக்கை மனு (Caveat Petition) தாக்கல் செய்ய அனைத்து மாவட்ட ஆட்சியர்களும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.
4. ஆக்கிரமணங்கள் அகற்றுவதற்கு தேவைப்படும் பணியாட்கள் / இயந்திரங்கள் / தளவாடச் சாமான்களை சம்பந்தப்பட்ட துறையே வழங்கவேண்டும். அதற்கான செலவினத்தை சம்மந்தப்பட்ட ஆக்கிரமணதாரர்களிடமிருந்து வசூலித்துக்கொள்ளலாம்.
5. ஆக்கிரமணங்கள் அகற்றுவதற்கு தேவையான நிதியை மாநில அரசு முகமைகள் மூலமாக பல்வேறு மாவட்ட முகமைகளுக்கு மாவட்ட ஆட்சியர் வழியாக வழங்கும்.

## ஆக்கிரமிப்புகள் அகற்றுதல் தொடர்பான நடவடிக்கை – காலவரையறை

| | |
|---|---|
| அரசுக்குச் சொந்தமான பொது இடங்களில் . ஆக்கிரமித்துக் கட்டப்பட்டுள்ள மதம் சார்ந்த கட்டிடங்களை அடையாளம் கண்டு கணக்கெடுத்தல். | 9 மாதங்கள் |
| மதம் சார்ந்த ஆக்கிரமணங்களை சுமூகமான ஏற்பாட்டின் படியும் ஒத்த கருத்தின் அடிப்படையிலும் அகற்றுதல் / இடமாற்றம் செய்தல் / வரன்முறை செய்தல் மற்றும் சேவைத்துறையின் ஒத்துழைப்புடனும் சட்ட விதிகளின் படியும் ஆக்கிரமணங்களை அகற்றுதல் | 15 மாதங்கள் |

கி.தனவேல்,
அரசு செயலாளர்.

Revenue Department,
Secretariat,
Chennai 600 009.

# POLICY ON REMOVAL / REGULARISATION / RELOCATION OF ENCROACHMENTS ON PUBLIC LANDS BY WAY OF TEMPLE / MOSQUE / CHURCH / GURUDWARA ETC.,

## REVENUE DEPARTMENT

Encroachment in Government Land by Religious Structures - Writ - SLP (C) No. 8519/2006 - Interim judgement delivered - POLICY on Removal / Relocation of Encroachments on Public Lands by way of Temple / Mosque / Church / Gurudwara etc., - Affidavit filed before the Supreme Court of India on the Government Policy - Regarding

-----

### Introduction

The Honourable High Court of Gujarat while hearing a petition regarding encroachment in public property by Religious institution, has directed the State Government to take immediate steps for removal of encroachments of Religious Structures on Public places without any discrimination and submit a report. Since such action was sensitive and could trigger a communal crisis that could spread beyond the State of Gujarat, an SLP (Civil) No.8519/06 was filed (by the Union of India), challenging the order of the Gujarat High Court dated 2.5.2006. Though the Supreme Court in its orders dated 4.5.2006 has stayed the operation of the impugned order of the Gujarat High Court, in its subsequent order dated 7.4.2009 has directed all the States and Union Territories to implead as respondents to this petition.

2. The Supreme Court has also directed that henceforth no unauthorised constructions shall be carriedout or permitted in the name of Temple, Church, Mosque, Gurudwara etc., on Public Streets, Public parks or Public places. It has also been directed by the Supreme Court to formulate a Comprehensive Policy regarding Removal, Relocation and Regularisation of unauthorised constructions indicating the period within which the policy could be complied with.

3. In order to implement the orders of the Supreme Court of India in Special Leave petition No.8519 of 2006 an Additional Affidavit in the form of a Policy is aimed to remove / relocate / regularise the encroachments made by way of Temple, Mosque, Church, Gurudwara etc on public lands like public places, public streets, public parks etc so as to keep the public lands hindrance free for the: -

(i) free movement of public
(ii) protection of public interest
(iii) Maintenance of public order and
(iv) use of the land for public purposes wherever suitable and necessary.

The said Policy consist of the following:-

(a) Survey / Review of existing encroachment made by way of religious structures on public lands like public places, public parks, public streets etc., on a time frame

(b) Total prohibition / restriction on the construction of new religious structures in future on public lands and.

(c) Eviction of existing encroachments by way of religious structures in Public places, Paths, Parks including in objectionable Poramboke like Water Course / Source etc., in a time bound manner.

In order to execute the said policy effectively in the State the duties and responsibilities shall be assigned to District machinery under various headings.

## IDENTIFICATION AND SURVEY:-

The Collectors of the Districts shall be the designated authorities for the fulfillment of the objectives.

i) Appointment of officials shall be made by the District Collector for identification of encroachments made on public lands at village level, firka level, Taluk level,

Divisional level and District level. The officials shall be from Revenue, Public Works Department, Highways and Urban and Rural local bodies etc., appointed for their respective jurisdiction by proceedings of the District Collectors.

ii) All the officials so appointed for survey work shall work under the overall control of the District Collector who shall be authority to fix accountability for any commission or omission or ambiguity in the survey report and shall send with his observation thereon to Commissioner of Land Administration to take disciplinary action against the erring officials irrespective of the department.

iii) The Officials so appointed for identification of encroachments shall carryout the survey of encroachments made on public lands by way of Temple, Mosque, Church, Gurudwara etc. without any omission or commission.

iv) A detailed guideline / Executive instruction shall be issued by the Government in this regard.

## II. PROHIBITION / RESTRICTION / CONTROL ON NEW ENCROACHMENTS BY WAY OF RELIGIOUS STRUCTURES

i) The District Collectors shall ensure that no structure / encroachment comes up on public lands / property in future. For discharging the duties he shall clearly assign duties and responsibilities to various Revenue Officials, Highways Officials / Public Works Department Officials / Local bodies etc., For any violation disciplinary action shall be initiated against them.

ii) There shall be monthly review of the Supervision / Monitoring at Taluk, Division, District and State Level.

iii) The service providing Government undertakings like Tamil Nadu Electricity Board, Metro Water and Sewerage Board and Tamil Nadu Water Supply and Drainage Board shall not give power supply, water supply and connections for disposal of Sewerage to the religious structures constructed on public lands. The officials in the

concerned undertakings shall be accountable for any new connection if any given to the religious structures within their respective jurisdiction. In case of violation of the instructions if any noticed at any point of time, the officials shall be liable for disciplinary action. Municipal Corporations, Municipalities, Town Panchayat and other authorities connected with sanction of building plan shall not accord plan sanction for construction of religious structures of any nature in public lands.

iv) Director of Town & Country Planning, the Chennai Metropolitan Development Agencies and all urban and rural local bodies with whom the public purpose lands are vested, shall ensure that the public places, public parks, public streets reserved in the lay out shall not be allowed to be used for unauthorised construction of religious structures of any nature by imposing a condition in the sanction order. This will require strict implementation. The layout Promoters while applying for Plan approval should furnish an affidavit to the effect that the places earmarked for Public Purposes in the layout, will not be allowed to be encroached by way of

construction of religious buildings. If any violation is noticed, the local bodies will evict the encroachment forthwith.

## III. REMOVAL / RELOCATION / REGULARISATION OF ENCROACHMENTS BY WAY OF RELIGIOUS STRUCTURES : -

The Government in G.O.Ms.No.105, Revenue, dated 7.3.2001 have constituted a District Level Steering Committee to evict the encroachments made on the Government lands. The Collectors are conducting monthly review meeting to monitor the progress in eviction of encroachments.

The Government subsequently in G.O(MS) No. 771, Rev LD 6(2) Department, dated 27.11.2006 have constituted a High Level Committee under the Chairmanship of Hon'ble Minister of Revenue and Housing to review the encroachment in Government Poramboke land and to suggest measures/steps to be taken for Removal of such unauthorised encroachment. The Last such High Level committee meeting was held on 23.2.2010 and the minutes were communicated to all the District Collectors for necessary action.

**The committee has been empowered to:-**

a) Supervise eviction of encroachments on watercourse poramboke.

b) Taking quarterly review, of the review made by Special Commissioner and Commissioner of Land Administration on the monthly reports of the District Monitoring Committee.

c) Formulate plans for evicting encroachments made for more than 10 years by way of construction of pucca buildings on Government poramboke.

d) Take decisions on the cases in which consensus could not be arrived at the District Level Steering Committee.

The State Level and District Level Committees constituted for the purpose shall adopt the following strategy :-

**Persuasion / Motivation / Involvement of Public:–**

Finally for the removal of the existing structures the strategy will be to initiate action on two stages:

**Stage I**

i) The first approach for removal / relocation / regularisation of encroachments made by way of religious structures on public lands shall be by way persuasion, education and arriving at consensus wherever possible.

ii) The District Administration can involve public to have amicable solution wherever desirable.

iii) The eviction authorities shall seek the guidance / advice of the District Collector / District Revenue Officer on the need to seek the assistance of Police force and shall do eviction accordingly.

**Executive Action – II$^{nd}$ Stage**

Only in cases where the 1$^{st}$ approach has failed to yield desired result, the eviction authorities shall resort to evict the encroachments by invoking the provisions of respective Acts. In such cases the Police personnel may be called in to assist in the eviction of encroachments.

**Functions of the District Level Committees:-**

1. The Committee shall get consolidated survey report from all the officials in the Districts.

2. The Committee shall review each case of encroachment separately to formulate an action plan.

3. The Authorities who were empowered under the respective acts and rules shall carry out eviction as per the action plan and shall report the details of eviction carried out and the progress thereon to the State Level Committee through the Commissioner of Land Administration. The District Collector shall monitor eviction carried out by the authorities concerned and ensure through the respective authorities that no encroachments come up again after the removal in another area on the public lands.

4. The District Level Committee shall execute the instructions / directions issued by the State Level Committee through the Commissioner of Land Administration.

5. The personnel of the service providing Government undertakings like Tamil Nadu Electricity Board, Metro Water, Tamil Nadu Water supply and Drainage Board while carrying out eviction of unauthorised religious

structures on public land shall disconnect the Electricity service, Water supply and Sewerage connections etc., so as to prevent the coming up of the said structures again thereon.

**Monitoring and Reporting:–**

i) The District Level Committee based on the report submitted by the Revenue Divisional Officer and other authorities who are empowered to carryout eviction shall review the encroachments on case by case basis strictly on merits for relocation / regularisation and shall decide whether such encroachments are eligible for relocation and regularisation and submit a proposal with his due recommendations to the State Level Committee for taking appropriate decision / instruction.

ii) The District Collector in consultation with other members of the District Level Committee can go for amicable settlement of the issue and can allocate either some approved places or can select mutually agreed place for relocation for this purpose.

**Other measures :-**

1. A Certificate shall be obtained from the Village Administrative Officer during every Jamabandi to ensure that no such new religious encroachment has come up in the Village under their control during the fasli year.

2. Priority may be given for removal of encroachments which affects the free movement of Public in Public Places on Top Priority.

3. The District Collectors may take necessary action to file Caveat petition before Competent Courts so as to prevent grant of stay against eviction proceedings.

4. Manpower and material shall be provided by the respective Departments and they can collect the cost of eviction from the encroachers.

5. Expenses for the eviction - the State Government shall provide enough funds to various agencies through the District Collector for eviction of encroachment.

## ACTION PLAN – TIME FRAME

| | |
|---|---|
| Conduct of Survey and Identification of Encroachment made on the public lands by way of religious structures | 9 Months |
| Removal / Relocation / Regularization Persuasion/ Motivation/ Mutual Settlement and Eviction of encroachments involving the Acts and Rules in coordination with Service providing authorities | 15 Months |

K.DHANAVEL,
Secretary to Government.